


# தலைப்பு: முடக்கம்

## வழங்கியோர்

கரோனாவே ! உன் கொடூர
வைரசால் உலகை உலுக்கி!

சமுதாய உறவுகளை முடக்கிய
நுண்கிருமியே ! உன்னை வெல்ல கைகளைக்
கழுவிக் கழுவி
நோய் எதிர்ப்பு சக்தியாக மாறுவோம்!

அரசின் அன்பான ஊரடங்கு உத்தரவுக்கு
பணிவோம்!

வீட்டிற்குள்ளே இருந்து
உன்னை விரட்டுவோம்!

உறவுகளை விட்டு தனித்து இருப்போம்!

உலக உயிர்களை பாதுகாப்போம்!

இன்றைய முடக்கத்தை
நாளைய நல்லதொரு
தொடக்கமாக மாற்றுவோம்!

கவிதாயினி சை. சபிதா பானு
காரைக்குடி

வல்லரசு வலுவிழந்து
வாடிவதங்கி நின்றபோது
சொல்லொண்ணா துயரதுதான்
சொர்க்கபூமி முடக்கமிங்கே

சுற்றித் தாக்கம்
சூழ்ந்திருக்கும் மனிதகுலம்
பற்றும் பறிபோகவே
படுக்கையிலே முடக்கம்தான்

எட்டுத்திசையும் கிருமிபரவ
எல்லைகளும் மூடப்பட்டு
கட்டுப்பாடும் கொண்டுவர
கதிகலங்கவைத்த முடக்கமே

அன்றாட வாழ்வுக்காய்
அனுதினமும் உழைப்வர்க்கு
தின்டாட்ட தினமாகி
தீப்பொறியாய் பொனவாழ்வு

பாரினிலே பலமுடக்கம்
பாடசாலை பலதொழில்கள்
தேரினிலே போனவர்கள்
தினந்தோறும் வீட்டினுள்ளே

சாலைகளும் அடங்கிடவே
சரிந்துபோன சந்தைகளும்
சோலைகளாய் நந்தவனம்
சாய்ந்து சருகானதே

மண்வாச படையெடுப்பும்
மறந்துவிட வைத்திடவே
கண்கலங்கி நிற்கின்றோம்
கடுகதியான முடக்கத்தினால்.

சரளா விமலராஜா
சுவீஸ்